**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–600 006.**

**செப்டம்பர் 2021, பத்தாம் வகுப்பு துணைத்தேர்வு மறுகூட்டல் முடிவுகள் வெளியிடுதல் குறித்த செய்திக்குறிப்பு**

நடைபெற்ற செப்டம்பர் **2021** பத்தாம் வகுப்பு துணைத்தேர்வு முடிவின்மீது மறுகூட்டல் கோரி விண்ணப்பித்தவர்களில் மதிப்பெண் மாற்றம் உள்ள தேர்வர்களது தேர்வெண்களின் பட்டியல் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் **15.12.2021 (புதன்கிழமை) பிற்பகல் 2.00 மணிக்கு,** வெளியிடப்படுகிறது. இதில் இடம்பெறுபவர்கள் தங்களது தேர்வெண் மற்றும் பிறந்த தேதி ஆகிய விவரங்களை பதிவு செய்து தங்களுக்கான திருத்தப்பட்ட மதிப்பெண் அடங்கிய தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இப்பட்டியலில் இடம் பெறாத தேர்வெண்களுக்கான விடைத்தாட்களின் மதிப்பெண்களில் எவ்வித மாற்றமும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

**ஒம்/–**
**இயக்குநர்**

தேதி :-14.12.2021

இடம் :–சென்னை –600 006.